**OS.124/2017**

**Date: 22.10.2024**

**Pw2 உதயன்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1 ஆம் பிரதிபாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

**வழக்கு சொத்தானது இரண்டாம் பிரதிவாதிக்கு சொந்தமானது என்றால் சரிதான். இரண்டாம் பிரதிவாதி ரமேஷ் ஒன்றாம் பிரதிபாதி மனோகரனுக்கு07.10.2015 அன்று ஒரு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அதில் நான் சான்றோப்ப சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த பொது அதிகார பத்திரத்தில் இரண்டாம் பிரதிவாதிக்காக ஒன்றாம் பிரதிவாதி கிரயங்கள் செய்யலாம் என்று நிபந்தனை இருந்தது என்றால் சரிதான். அந்த நிபந்தனையின்படி ஒன்றாம் பிரதிவாதி வாதிக்குஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த கிரைய ஒப்பந்தத்திலும் நான் சாட்சியாக இருந்தேன் என்றால் சரிதான். மேற்குறிப்பிட்ட இரு ஆவணங்களிலும் நான் முதல் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எழுதப்பட்ட தேதி என்று ரூபாய் 2,00,000/- மற்றும் 21.8.2016 ரூபாய் 8,50,000/- பணம் கொடுக்கும் போது நான் உடன் இருந்தேன். வாதிக்கும் ஒன்றாம் பிரதிவாதிக்கும் இடையே நடைபெற்ற பரிவர்த்தனைகளில் நானும் உடன் இருந்தேன் என்றும் அந்த விபரங்கள் எனக்குத் தெரியும் என்றும் சொன்னால் சரிதான். 07.10.2015 தேதியிட்ட கிரைய ஒப்பந்தத்தில் முதலாவதாக இருப்பது என் கையொப்பம் தான். அந்த கையொப்பம் மட்டும்' Ex B1. பொது அதிகார பத்திரத்தில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் Ex B2. 21.8.2016 அன்று ரூபாய். 8,50,000/- கொடுத்தபோது நான்**

போட்ட சாட்சி கையொப்பம் என் முன் கட்டப்படுவது தான். அக்கையொப்பம் Ex B3.

(இரண்டாம் பிரதிவாதியின் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்துழைக்கப்படுகிறது)